பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
25 01 2026 SUNDAY 6 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

3. வாக்காளர் பட்டியல், ஜனநாயக நடைமுறையின் அடித்தளமாக உள்ளது என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 3-வது டிவென்ட்டி - டிவென்ட்டி கிரிக்கெட் போட்டி, குவஹாத்தியில் இன்று நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<<

தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

“எனது இந்தியா - எனது வாக்கு” என்ற கருப்பொருளில் இந்த ஆண்டிற்கான வாக்காளர் தினம் கொண்டாடப்படுகிறது.

ஜனநாயக நடைமுறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதையொட்டி, குடியரசுத் தலைவர் புதிய வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டையை வழங்குகிறார்.

நிகழ்ச்சியில், தேர்தல் பணியில் சிறப்பாக செயல்பட்ட பல்வேறு பிரிவினருக்கு குடியரசுத்தலைவர் விருதுகளை வழங்குகிறார்.

தேர்தல் நடைமுறையில் தொழில்நுட்ப பயன்பாடு, சிறப்பான நிர்வாகம், வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவற்றில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

சிறப்பான பணியாற்றிய ஊடகங்களுக்கும் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

இந்த விழாவில் மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன்ராம் மெக்வால் பங்கேற்கிறார்.

>>>>>><<<<<<

வாக்காளர் பட்டியல், ஜனநாயக நடைமுறையின் அடித்தளமாக உள்ளது என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. *Gyanesh Kumar* தெரிவித்துள்ளார்.

தேசிய வாக்காளர் தினத்தை ஒட்டி அவர் விடுத்துள்ள அறிக்கையில், தகுதியான வாக்காளர்கள், பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்யும் வகையில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் சுமுகமாக நடைபெற்றதை சுட்டிக்காட்டியுள்ள அவர், எஞ்சியுள்ள மாநிலங்களில் விரைவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வாக்காளர்களுக்கு அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் *ECInet* செயலி வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது, தேர்தல் ஆணையத்தின் தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் நிர்வாகத் திறனை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இளம் வாக்காளர்கள் தேர்தலில் தவறாமல் வாக்களித்து, ஜனநாயகத்தின் தூதுவர்களாக திகழ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தவறான தகவல்கள் மற்றும் போலியான செய்திகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இளம் வாக்காளர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. Gyanesh Kumar வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பெரம்பலூர் மாவட்டம், திருமாந்துறை அருகே காவலர்கள் மீது நாட்டு வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவது கவலை அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள், திமுக அரசின் திறனற்ற நிர்வாகத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

2025-ஆம் ஆண்டிற்கான சிறந்த ஊடகத்திற்கான விருது, ஆகாஷ்வாணி செய்திப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் வானொலிப் பிரிவில், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்டதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ள விழாவில், குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இந்த விருதை வழங்குகிறார்.

பொதுச்சேவையில் முழுமையான அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆகாஷ்வாணி செய்தி குழுவிற்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக அதன் தலைமை இயக்குநர் திரு. ராஜீவ் குமார் ஜெயின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த அங்கீகாரம், மேலும் முனைப்புடன் பணியாற்றுவதற்கான உத்வேகத்தை அளிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தேர்தலில் தொழில்நுட்ப பயன்பாட்டை திறம்பட மேற்கொண்டதற்கான விருது தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

குற்றச் சம்பவங்களை தடுக்கும் நோக்கில், நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

திறந்தவெளி மைதானம், வங்கிகள், வணிக வளாகங்கள் அமைந்துள்ள இடங்களில் ஜி.பி.எஸ் கருவி பொருத்தப்பட்ட இருசக்கர வாகன ரோந்து சேவையும் தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சரவணன் 34 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

திருப்பூரில் 22வது புத்தக கண்காட்சி நேற்று தொடங்கியது.

பத்து நாட்கள் நடைபெறவுள்ள இந்த கண்காட்சியில் குழந்தைகளுக்கான புத்தகங்கள் மற்றும் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் – சபரிஷ் 40 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

சாலை விபத்துக்களை தவிர்க்கும் நோக்கில், மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சேலத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், சாலை விதிகளை மதித்து நடக்க வேண்டும் என்று மாவட்ட துணை காவல் ஆணையர் திரு. சுப்பிரமணிய பாலச்சந்திரா தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் – பாலச்சந்திரா 20 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

இறையாண்மை, நீதி மற்றும் பன்முகத்தன்மையை இந்தியா தொடர்ந்து கடைபிடித்து வருவதாக ஈரான் தூதர் திரு. Mohammad Fathali நன்றி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

சிரியா அரசுக்கும், குர்திஷ் போராட்டக்காரர்களுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையில் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை.

>>>>>><<<<<<

மேற்குவங்கத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்த புகார்களை அவ்வப்போது இணையதளத்தில் பதிவேற்ற தேர்தல் ஆணையம், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<<<

ஜனநாயக நடைமுறைகள் குறித்து, இளம் வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் பெங்களூருவில் நடைபெற்றன.

>>>>>><<<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பயனாளிகளுக்கு ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் வழங்கினார்.

>>>>>><<<<<<<

திண்டுக்கல் மாவட்டம், பழனி வரதமா நதி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது

>>>>>><<<<<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் வரும் 28ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<<

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகே தோல் தொழிற்சாலையில் ஏற்பட்ட விஷவாயு கசிவு காரணமாக இரண்டு பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<<

சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் இரண்டரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மூன்று உடற்பயிற்சிக் கூடங்களை சென்னை மாநகர மேயர் திருமதி. பிரியா திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<<

***விளையாட்டுச் செய்திகள்***

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 3-வது டிவென்ட்டி - டிவென்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

குவஹாத்தியில், இப்போட்டி இரவு 7 மணிக்குத் தொடங்குகிறது.

>>>>>><<<<<<<

*19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*Bulawayo-வில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த நியூஸிலாந்து அணி 135 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*மழை காரணமாக ஆட்டம் 37 ஓவராக குறைக்கப்பட்டதுடன், 130 ரன் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது*

*இதனையடுத்து, 130 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு ஆடிய இந்திய அணி, 13 புள்ளி 3 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை எட்டியது.*

*>>>>>>END<<<<<<<*